1974 மார்ச் 27]

வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சிறப்பு வகுப்புகளுக்கு வரும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் சிறப்புக் கட்டணமாக ரூ. 20 வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த லேபர் சட்டங்கள் பற்றி டிப்ளமா கோர்ஸ் பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுமா ? தமிழிலே அங்கு படிப்பு சொல்லிக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எம்.எல். படிக்கின்றவர்களுக்கு சிறப்பான சலுகைகள் அளிக்கப்படுமா ? என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார்கள் ? ஒரு சில சப்ஜெக்டுகளுக்குதான் எம்.எல். இருக்கிறது, எல்லா பாடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல் ஆண்டிலே தேர்வு பெறாதவர்கள் இரண்டாம் ஆண்டிலே சேர்ந்திருக்கிறார்கள், முதல் ஆண்டு படிப்பை முடிக்காமல் மூன்றாவது ஆண்டுக்குச் செல்ல முடியாது. அப்படிப் பட்டவர்கள் 70 சதவீதத்தினர் இருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டிலே தேர்வு பெறாமல் மூன்றாம் ஆண்டுத் தேர்வுக்குச் செல்ல முடியாது. அப்படிப்பட்டவர்கள் 60 சதவீதத்தினர் இருக்கிறார்கள். பி.ஜி.எல். இரண்டு ஆண்டுகளில் இப்படிப்பட்ட முறை பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது, அது நல்லமுறையில் நடந்தால் எம்.எல்.க்கும் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டால் பரிசீலிக்கலாம்.

முதியோர் கல்வி.

628 வினா*—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதியோர் கல்வி கற்பிப்பதின் மூலம் 1971–72 மற்றும் 1972–73 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு முதியோர், கல்வி அறிவு பெற்றார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உழவர் செயல் முறை எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் 1971–72 ஆம் ஆண்டு நான்கு மாவட்டங்களில் 9,473 முதியோர்களும், 1972–73 ஆம் ஆண்டு ஐந்து மாவட்டங்களில் 10,105 முதியோர்களும் கல்விப் பயிற்சி பெற்றுர்கள்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, முதியோர் கல்விக்கு சாதனங்கள், எக்விப்மெண்ட்ஸ் எதன் மூலம் பயன் படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதியோர் கல்வி பங்க்ஷனல் லிட்டரஸி என்ற அடிப்படையிலே உழவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு உழவர்களுக்கு எந்த எந்த வகைகளிலே எந்த எந்த சொற்களிலே பயிற்சி வேண்டுமோ எந்த எந்த விவரங்களை அளிக்க வேண்டுமோ அதற்காக தனி நூல் ஒன்று போடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் முதியோர் கல்வித் திட்டம் ஆங்காங்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் 20 மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மையத்திலிருந்தும் 30 முதியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த நூலின் வாயிலாக அந்தக் கல்வி போதிக்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வி என்பது எந்த முறையில், எந்த அடிப்படையில் நடத்தப் படுகிறது? அதற்கு ஆசிரியர்கள் எப்படி நியமிக்கப்படுகிறுர்கள்? குறிப்பாகக் கிராமங்களில் பழங்காலத்தில் படிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணத்தால், அவர்கள் கை ரேகை வைக்கின்ற நிலையில் இருக்கிறுர்கள், எனவே, அவர்கள் பேங்குகளிலேகூட கணக்கு வைத்துக்கொள்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. எனவே, இதில் பிரத்யேகமாகக் கவனம் செலுத்தி ஒவ்வொரு கிராமத்திலும் முதியோர் கல்வி கற்பிப்பதற்கு வசதி வாய்ப்புகள் இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பகல் பள்ளியிலே இருக்கும் ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி யளித்து கூடுதல் உதவித் தொகை அளிக்கப்பட்டு அவர்கள் மூலம்

1974 மார்ச் 27]

இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உழவர் செயல்முறை, அதாவது Functional literacy என்ற அளவிற்கு, உழவர்களுக்கு எந்தெந்தச் சொற்கள் பயன்படுமோ, எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுமோ, விதை, உரம், இன்னும் வேறு பல வகைகளில் எந்தெந்தச் சொற்களை உழவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ அந்த அறிவை ஓராண்டு காலத்தில் வளர்க்கின்ற முறையில்தான் இந்த வகுப்புகள் துவங்கப் பட்டிருக்கின்றன. இதுவரையில் கிட்டத்தட்ட பொள்ளாச்சி கல்வி மாவட்டம், தஞ்சை கல்வி மாவட்டம், திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களில் வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டு மதுரை, புதுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் வைப்பதற்குத் திட்டம் இருந்து வருகிறது.

உதகமண்டலம் ஏரி.

*629 **வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் ஏரியின் பராமரிப்புப் பணி மீனளத் துறையிலிருந்து சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) படகோட்டல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு சிறப்பிடம் அளித்து, உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் உதகமண்டலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. எனவே, படகு நிலையச் சிற்றுண்டிச் சாலை உட்பட படகு நிலையத் தொகுதி முழுவதும் மீனளத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைக் காட்டிலும் பயணி களுக்கு மிகுந்த வசதிகள் அளித்து, வணிக அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்க ஏரியில் தூர் வாருதல், ஏரிக்கு எழில் கூட்டுதல் ஆகியவற்றிற்காக அரசும் ரூபாய் ஐந்து லட்சம் செலவு செய்துள்ளது. உதகமண்டலம் ஏரியை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. எனவே, ஏரியினை சுற்றுலாத் துறையின் பொறுப்பின் கீழ்க் கொண்டு வருவதும், மீனளம் குறித்த தொழில்